# செய்தி வெளியீடு எண்–220   நாள்–15.4.2007

## அனைத்துக் கட்சித் தீர்மானம்.

## 15.4.2007

காவேரி நடுவர் மன்றம் தமிழகத்திற்குச் சாதகமான நிலையில் தீர்ப்பு வழங்கிவிட்டதாக கர்நாடகம் தவறாகக் கற்பனை செய்து கொண்டு, அதை உச்ச நீதி மன்றம் சென்று தடை செய்வதற்கும், அரசிதழில் பதிவு செய்வதைத் தடுப்பதற்கும் முயற்சி மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் முதலில் நடுவர் மன்றத்திற்கு நமது உரிமைகளையும் தேவைகளையும் வலியுறுத்தி விளக்கம் கோரும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்து விட்டு, அதன் பின்னர் தேவைப்பட்டால் நாமும் உச்ச நீதி மன்றத்தில் முறையீடு செய்வது என்றும் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

***

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.